**06.08.2022**

**OS.No. 89/2013 PW : 1, திரு. மரகதவள்ளி**

**3, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

என் தாய்மாமா முனுசாமி 16.07.2012ல் காலமானார். இவ்வழக்கை தாக்கல் செய்தபோது என் தாயார் உயிருடன் இருந்தார். 25.07.2014ல் என் தாயாரான 2ம் வாதி காலமானார். இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்தபோது என் தாய்மாமா முனுசாமி (1ம் பிரதிவாதி) உயிருடன் இல்லை. முனுசாமி இறந்தது பற்றி 1 முதல் 4 வாதிகளுக்கு தெரியும். 1 மற்றும் 3 வாதிகளான அனுசயா மற்றும் சாந்தாஅம்மாள் உயிருடன் இருக்கிறார்கள். 4ம் வாதியான சாவித்திரியம்மாள் எப்போது இறந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. அவருடைய வாரிசுகாள 14 முதல் 16 வரையிலான வாரிசுகளாக சேர்த்திருக்கிறேன். நான் 1 முதல் 3 வாதிகளுக்காகத் தான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். நான் என் முதல் விசாரணை வாக்கு மூலத்தை தாக்கல் செய்தபோது சாவித்திரியம்மாள் உயிருடன் இல்லை. ஆகவே அவருக்கும் சேர்த்து நான் சாட்யிம் அளிப்பதாக முதல் விசாரணையில் கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. 29.05.1991 தேதியட்ட பாக ஆவணம் எழுதும்போது எனக்கு 12 வயது. என்னுடைய தாய்மாமாவான முனுசாமியும், 1 முதல் 4 வாதிகளும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அந்த பாக ஆவணத்தில் கையொப்பம் போட்டதாக நான் கேள்விபட்டேன். 1 முதல் 3 வாதிகள் மேற்கூறிய பாக ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் தங்களுடைய கையெழுத்துக்கள் இல்லை என்று எப்போதும் சொல்லவில்லை.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

அந்த பாக ஆவணத்தில் சி ஷெட்யூல் சொத்துக்கள் என் தாயாரான பிரேவதிக்கு ஒதுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளதா என்று கேட்டால் காட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்த சி ஷெட்யூல் சொத்து என் தாயாரின் கைக்கு வரவில்லை. அது என் தாயாரின் கைக்கு கிடைத்தது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 9வது பாராவில் பிளாட் எண்கள் 3, 4, 5, 7 ஆகியவற்றை விற்றதாக கூறியுள்ளேன். அது சர்வே எண் 507/2ல் உள்ள சொத்தாகும். அதற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. அந்த பாக ஆவணத்தில் உள்ள மனை எண் 4-ஐ பொறுத்து மட்டும் தான் நான் உரிமை கோரவோ சாட்சியம் அளிக்கவோ முடியும் என்றால் சரியல்ல. 29.05.1991 தேதியட்ட பாகம் ஆவணம் எப்படி மோசடி ஆவணம் என்று கேட்டால் அந்த ஆவணத்தில் உள்ள சொத்துக்களை எங்களுக்கு கொடுக்கவும் இல்லை. நாங்கள் அதை அனுபவிக்கவும் இல்லை. மேலும் அதில் குறிப்பிட்டவாறு ரோடும் இல்லை. நகராட்சி அந்த சொத்தில் குப்பை தொட்டில் வைத்து விட்டதால் அது மோசடி ஆவணம் என்று கூறுகிறேன். 2017ல் தான் நகராட்சி குப்பை தொட்டி வைத்தது. வழக்கை தாக்கல் செய்தபோது பிளாட் எண் 4ல் குப்பை தொட்டி இல்லை. என் தாயார் உயிருடன் இருந்தவரை பிளாட் எண் 4ல் குப்பை தொட்டி இல்லை. பிளாட் எண். 4-ஐ பொறுத்து நகராட்சி ஆட்சேபனை செய்திருந்தது. அதை எதிரித்து என் தாயார் நடவடிக்கை எடுத்தாரா என்று கேட்டால் என் தாயார் ஜமாபந்தியில் மனு கொடுத்தார். அது அரசாங்க சொத்து என்று தகவல்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

வந்தது. அதற்குள் என் தாயார் காலமாகிவிட்டார். என் தாயாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து அரசு சொத்து என்று 12 வருடங்களுக்கு பின்னர் தகவல் வந்தால் அந்த சொத்தை தான் நாங்கள் மீட்டுக்கொள்ள வேண்டுமே ஒழிய பாகப்பிரிவினை ஆவணத்தை செல்லாது என்று நாங்கள் கேள்வி கேட்க முடியாது என்றால் சரியல்ல. 1 முதல் 4 வாதிகளும் முனுசாமியும் ஒருவருக்கொருவர் அன்பாக தான் இருந்தார்கள் என்றும் அவர்கள் அனைவரும் சேர்ந்து தான் யார் யாரையும் கட்டாயப்படுத்தாமல் பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதிக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணம் எழுதும் போது சண்டை நடந்ததாகவும், 1 முதல் 4 வாதிகள் கையொப்பம் போட்டுவிட்டு ஆவணத்தை கூட வாங்காமல் திரும்ப வந்துவிட்டதாக சொன்னார்கள். என் திருமணத்திற்க பின்னர் தான் முனுசாமி பாக ஆவணத்தை என் தாயாரிடம் கொடுத்தார். என் தாயார் அதை வாங்கவில்லை. முனுசாமி அதை வைத்து விட்டு சென்றுவிட்டார். நான் சொல்லும் இந்த விவரங்களை என் பிரதிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை. எனக்கு 2000ம் வருடத்தில் திருமணம் நடந்தது. 2000ல் இருந்து 2012 வரை ஏன் இவ்வழக்கை 1 முதல் 4 வாதிகள் தாக்கல் செய்யவில்லை என்று கேட்டால் சொத்து பற்றி தெரியாமல் இருந்திருக்கலாம் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எங்கே இருக்கிறது என்று 1 முதல் 4 வாதிகள் பார்த்தார்களா என்றும் அவர்களால் சொத்துக்களை அடையாளம் காட்டமுடியுமா என்று கேட்டால் என் தாயார்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

மட்டும் சொத்தை பார்த்திருக்கிறார். அதுவும் என் தாயார் சொல்லிதான் தெரியும். நான் என் தாயாருடன் சென்று தாவா சொத்துகளை பார்த்தது இல்லை. விசாலாட்சி எந்த எந்த சொத்துக்களை தன்பெயரில் வாங்கினார் என்று கேட்டால் வீட்டை வாங்கினார். அது சர்வே எண் 503/3பி இருக்கிறது. சர்வே எண் 503/2ல் உள்ள சொத்தையும் விசாலாட்சி மைனர் ராஜூபிள்ளை பெயரில் வாங்கியிருக்கிறார். சர்வே எண் 804 மற்றும் 805 உள்ள சொத்துக்கள் ராஜூபிள்ளை பெயரில் இருக்கிறது என்று சாட்சி தானாக சாட்சி அளிக்கிறார். சர்வே எண் 503ல் உள்ள சொத்துக்கள் விசாலட்சியால் ராஜூபிள்ளைக்காக வாங்கப்பட்டது என்றும் சர்வே எண் 804 மற்றும் 805ல் உள்ள சொத்துக்கள் ராஜூபிள்ளையால் அவரது பணத்தை கொண்டு அவரது பெயரிலேயே வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. ராஜூபிள்ளை வேலை எதுவும் செய்யவில்லை. அவர் அருட்பெருஞ்சோதியில் சேர்ந்து மக்களுக்கு இலவசமாக மருந்துகள் தயாரித்து கொடுப்பதால் அவர் வேலைக்கு செல்லவில்லை. அவர் தனியார் பேருந்தில் ஓட்டுநராக 10 வருடம் வேலை பார்த்தார். நாட்டு வைத்தியம் என்பது அவரது விருப்ப தொழில் என்றும் அதுபோக அவர் விவசாயம் செய்து பிழைப்பு நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. விசாலாட்சி என்னுடைய கொள்ளுபாட்டி ஆவார். அவரது கணவர் பெயரும் முனுசாமி ஆகும். விசாலாட்சி தொழில் எதுவும் செய்யவில்லை. அவரது கணவர் ரயில்வேயில் வேலை பார்த்தார். அந்த சம்பளத்தை கொண்டு விசாலாட்சி

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

சொத்துக்களை வாங்கினார். விசாலாட்சி பெயர் பெயரளவில் கிரைய ஆவணத்தை குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொத்தின் உரிமையாளர் அவரது கணவரான முனுசாமி என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கொள்ளுதாத்தா முனுசாமி நான் கூறும் சொத்துக்கள் அவரது பெற்றோர்களிடமிருந்து வரவில்லை. முனுசாமி சொத்தை தனது மனைவியான விசாலாட்சி பெயரில் சொத்து வாங்கவேண்டுமா அல்லது மகனான ராஜூபிள்ளை பெயரில் சொத்து வாங்கவேண்டுமா என்பதை அவர் தான் முடிவு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. முனுசாமி பணத்தை விசாலாட்சியிடம் கொடுத்ததால் அவர் தான் முடிவு செய்வார். தாவா சொத்துக்கள் மற்றும் பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் முனுசாமியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் இருந்தபோதிலும் ராஜூபிள்ளை தன்னுடைய சகோதரிகளாக 1 முதல் 4 வாதிகளை அழைத்து நேர்மையான முறையில் சொத்துக்களை 1991 வருட பாக ஆவணத்தின் மூலம் பிரித்துக்கொடுத்தார் என்றால் சரியல்ல. 3, 4, 5, 7 பிளாட்களை விற்பனை செய்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அந்த பிளாட்கள் எதுவும் பாகப்பிரிவினை ஆவணத்தில் வரவில்லை. மேற்கூறிய பிளாட்கள் இவ்வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஆவணத்தை பதிவு செய்யும் கிரையம் கொடுப்பவரிடம் கிரைய பணத்தை பெற்றுக்கொண்டீர்களா என்று சார்பதிவாளர் பொதுவாக கேட்கும் விவரம் எனக்கு தெரியும். 07.06.2012 அன்று முனுசாமி

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

7 மற்றும் 8ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்தபோது 26.05.1991 தேதியிட்ட பாக ஆவணம் செல்லாது என்றும் எந்த ஆட்சேபனையோ உத்தரவோ இல்லை என்றும் ஆகவே அந்த செட்டில்மெண்ட ஆவணத்தை நாங்கள் கேள்வி கேட்க முடியாது என்றால் சரியல்ல. 12.02.1997 1ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணத்தை எழுதி கொடுத்த போது தடை ஆணை எதுவும் இல்லை என்றும் ஆகவே அந்த ஆவணத்தையும் நாங்கள் கேள்வி கேட்கமுடியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணத்திலோ கிரைய ஆவணத்திலோ எழுதி கொடுக்க உரிமை இல்லை என்று எப்படி கூறுகிறேன் என்று கேட்டால் அந்த சொத்தில் என் தாயாருக்கு பங்கு இருப்பதால் அவர் ஆவணங்களை எழுதி கொடுக்கமுடியாது என்று சொல்கிறேன். மேற்கூறிய ஆவணங்களை 1ம் பிரதிவாதி எழுதி கொடுப்பதற்கு முன்னர் 1 முதல் 4 வாதிகள் நீதிமன்றத்தில் எவ்வித தடை ஆணையும் பெறவில்லை என்றால் அவ்விதம் எழுதி கொடுத்தது எனக்கு தெரியாது. 1 முதல் 4 வாதிகள் தடை உத்தரவு ஏதேனும் வாங்கினார்களா என்று கேட்டால் தடை உத்தரவு வாங்கவில்லை. ஏன் என்றால் அந்த ஆவணங்களை எழுதி கொடுத்தது அவர்களுக்கு தெரியாது. பாகப்பிரிவினை ஆவணத்தின்படி சொத்து சரியாக பிரிக்கப்படவில்லை என்று 1ம் வாதி என்னிடம் எப்போது கூறினார் என்று கேட்டால் இவ்வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு கூறினார். இவ்வழக்கை தாக்கல் செய்தபோது 1 முதல் 4 வாதிகளுடன்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

நான் வழக்கறிஞரை பார்க்கவில்லை. இவ்வழக்கை தாக்கல் செய்வது குறித்து 1 முதல் 4 வாதிகள் என் வீட்டில் வைத்து தான் பேசினார்கள். அந்த கலந்துரையாடலை நான் கேட்டேன். என்னுடைய கணவர் வீடு என்னுடைய அம்மாவீட்டிலிருந்து சுமார் 1 கி.மீ. தூரம் இருக்கும். என் கணவர் சென்னை, சேப்பாக்கத்தில் குடியிருக்கிறார். என் தாயார் வீடு சென்னை, எல்லீஸ் ரோட்டில் இருக்கிறது. நான் என் தாயார் வீட்டிற்கு சென்றிருந்தேன். 2012ல் எனக்கு 11 வயது மற்றும் 9 வயது உடைய இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். என் கணவர் லெட்ஜர் பைண்டிங் மற்றும் சேப்டி மெட்டீரியல்ஸ் வியாபாரம் செய்கிறார். அவருடைய தொழிலில் நான் உதவி செய்வதில்லை. நான் என் வீட்டையும் குழந்தைகளையும் பார்த்துக் கொள்வேன். எனக்கு வருமானம் இல்லை. நான் என் குடும்பத்தை பார்க்கவே நேரம் சரியாக இருக்கும் என்றும் ஆகவே என் தாயார் வீட்டில் வழக்கை தாக்கல் செய்வது சம்பந்தமாக பேசியதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் தாயார் குடும்பத்தை தாண்டி 3வது நபர்களுக்கு எதிராக கேட்டிருக்கும் பரிகாரங்கள் நிலைநிற்கதக்கதில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணம் பதிவு செய்யப்பட்டதோடு மட்டும் அல்லாமல் அது அமுலுக்கும் வந்துவிட்டது என்றால் சரியல்ல. 29.05.1991 தேதியிட்ட பாக ஆவணத்தை பற்றி சாட்சியம் அளிக்க நான் தகுதியான நபர் இல்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 3 வாதிகள் உயிருடன் இருப்பதால் அவர்கள் மட்டுமே மேற்கூறிய பாக ஆவணத்தின்

S
GANAPATHISAMY

Digitally signed by
S
GANAPATHISAMY

செல்லும் மற்றும் செல்லா தன்மை குறித்து பேச முடியும் என்றால் சரியல்ல. அவர்கள் முழு உண்மையை கூறிவிடுவார்கள் என்று பயந்து தான் அவர்களை சாட்சியாக விசாரிக்காமல் நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

14 முதல் 16 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

I Additional District and Sessions Judge,
Tiruvallur.